3. உரிமை மீறல் பிரச்சினை

உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் செல்வி கே. பாலபாரதி ஆகியோர் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த நடவடிக்கையைக் கைவிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று (20–7–2009) இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மார்க்சிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசப்போவது 110 statement பற்றியா?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: 110 statement தான். ஆனால், நான் அதற்கு உள்ளே போகவில்லை. (குறுக்கீடு) உள்ளே போகவில்லை, உள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்) அதற்கு உள்ளேயே நான் போகவில்லை. (குறுக்கீடுகள்) அதற்குள் நான் போகவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நாங்களும் யாரையும் உள்ளே அனுப்புவதாக இல்லை. உள்ளே போகவில்லை, உள்ளே போகவில்லை என்று தாங்கள் சொல்லத் தேவையும் இல்லை. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று (20–7–2009) இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி (குறுக்கீடுகள்) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்மீது (குறுக்கீடுகள்) எழுப்பப்பட்ட அவை உரிமைப் பிரச்சினை குறித்து மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருப்பதாகக் கருதி. . . (குறுக்கீடுகள்) முதலில் என்னுடைய verdict–ஐக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நான் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். நேற்று எடுக்கப்பட்ட நிலையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றேன். அதற்கு ஒரு தீர்ப்பு அளிக்கின்றார்.

அது முடிந்த பிறகு வேண்டுமானால் உங்களுடைய கருத்துகளைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று (20–7–2009) இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்மீது எழுப்பப்பட்ட அவை உரிமைப் பிரச்சினை குறித்து மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருப்பதாகக் கருதி, இதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226–ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக அறிவித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினை குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இத்துடன் விட்டுவிடலாம் என கருத்து தெரிவித்ததன் அடிப்படையில், பேரவை விதி 286–ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இப்பிரச்சினை குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இத்துடன் விட்டுவிடலாம் என்று முடிவு செய்கிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். 110 statement மீது பேசக்கூடாது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு உள்ளே போகவில்லை. நேற்று நடந்த ஒரு பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் ஒரு தீர்வினை இங்கே இப்போது அறிவித்தார்கள். ஆனால், அதை அறிவிக்கிற நேரத்தில், கடந்த காலங்களில் ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் பல தடவை அதை மேற்கோள் காட்டிப் பேசியிருக்கின்றார். திரும்பவும், இன்றும் அதைப் பேசுவதற்கு எந்தவித நியாயமான முகாந்திரமும் இல்லை. திரும்பத் திரும்ப, பழைய பஞ்சாங்கத்தையே பேசிப் பேசி (குறுக்கீடுகள்) இந்தச் சபையை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன் கேளுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இல்லை, இல்லை. ஒரு தடவை சொன்னால் போதாதா? அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருந்தால் (குறுக்கீடு) அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? நேற்று நடந்த பிரச்சினைக்கும் (குறுக்கீடுகள்) நேற்று நடந்த பிரச்சினைக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் பொறுங்கள். இதுசம்பந்தமாக அவர்கள் சொன்ன அந்த version–ல் உங்களுக்கு dispute கிடையாதல்லவா? நான் permit பண்ணுகிறேன்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு) விடுங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை இந்த அவையில் மறுபடியுமோ, மூன்றாவது தடவையோ, நான்காவது தடவையோ சொல்லக்கூடாது என்று விதி கிடையாது. நல்ல கருத்தை நாலாயிரம் தடவை சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் சொன்ன கருத்து தவறாக இருந்தால், குற்றமாக இருந்தால், அவை மரபை மீறியதாக இருந்தால் அதை மறுக்கலாமே தவிர, திரும்பத் திரும்பச் சொல்லலாமா என்று கேட்கக்கூடாது. இந்தச் சட்டமன்றத்திலே பல நடவடிக்கைகள் திரும்பத் திரும்பத்தான் நடைபெறுகின்றன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அதை விடுங்கள். அடுத்த subject–க்குப் போய்விடுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி, முடியுங்கள்.

முற்பகல் 9–40

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் இந்தச் சட்டமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பினை மறுக்கின்ற வகையிலும், கொச்சைப்படுத்துகின்ற வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து இருந்ததால், இந்த அவையிலிருந்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, என்ன? சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிக்கை படித்ததையொட்டி—அதற்குள் நான் செல்லவில்லை; அதைப்பற்றி நான் விமர்சிக்கவும் இல்லை—கொண்டுவந்த தீர்மானத்தை அல்லது உரிமைப் பிரச்சினையைத் திரும்பப்பெற்றதை உள்ளபடியே வரவேற்கிறேன். அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் இதே சட்டப்பேரவையில் கடந்த காலங்களிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு உரிமைகள் மறுக்கப்படுகிற நேரத்தில் அல்லது நேரத்தின் அருமை கருதி மறுக்கப்பட்டாலும்கூட வெளிநடப்புச் செய்வது, வெளியிலே சென்று செய்தியாளர்களுக்குப் பேட்டி கொடுப்பது வாடிக்கையாக, மரபாக இருந்து வருகிறது.

அந்த அடிப்படையிலே உறுப்பினர்கள் சொல்லுகிற நேரத்தில் அதற்காக ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகின்ற முன்னுதாரணம் இந்தச் சட்டமன்றத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டாம் என்பது எங்களுடைய கருத்து. அதுமட்டுமல்ல, காவல் துறை மானியக் கோரிக்கை விவாதம் இரண்டு நாட்கள் நடைபெற்றன. எந்த மானியக் கோரிக்கையானாலும், இரண்டு நாட்களுக்கு எடுத்துக்கொண்டாலும்கூட, அந்த விவாதத்தில் பா.ம.க., காங்கிரஸ், அ.தி.மு.க. கட்சியினர் பேசுவது வழக்கம்; தொடர்ந்து அனுமதி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், காங்கிரஸ் கட்சி, அ.தி.மு.க. உறுப்பினர்கள் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் என்று பேசுகிற நேரத்தில், பாட்டாளி மக்கள் கட்சிக்கு இரண்டு நாட்களுக்கும் சேர்த்து 15 நிமிடங்கள் மட்டும்தான் என்று சொல்வதும், ஒரே நாள்தான் உங்களுக்கு அனுமதி என்று சொல்வதும் எந்தவிதத்திலே ஏற்புடையதாக இருக்கும்? இது எதிர்க்கட்சிகளைப் புறக்கணிப்பதாக இருக்கிறதா இல்லையா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, உள்ளபடியே ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர்—அவர்களுக்கு என்ன எண்ணம் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறமாதிரி ஆளுங்கட்சியினர் பேசுவதைவிட, எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்புக் கொடுத்து, அவர்களின் கருத்தைக் கேட்டு அதை நடைமுறைப்படுத்தினால் ஏற்புடையதாக இருக்கும். ஆகவே, இனி வருங்காலங்களிலாவது அப்படிப்பட்ட நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனி வருகிற காலங்களில் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவெடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறபடி' பேசுவதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று மணி அவர்கள் பேசியதையே 'குறும்புத்தனம்' என்று சொல்லமாட்டேன்; 'விஷமத்தனம்' என்றும் விமர்சிக்கமாட்டேன்; அவர்கள் என்னிடத்தில் எடுத்துக்கொள்கின்ற உரிமையின் காரணமாக அவர்கள் எடுத்துச்சொன்னதாக நான் கருதுகின்றேன். ஆனாலும், கடந்த காலத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது காங்கிரஸ் கட்சி அல்லது அன்றைக்கு எங்களோடு உறவாக இருந்த பாட்டாளி மக்கள் கட்சி, இந்தக் கட்சிகளுக்கு எல்லாம் பேசுவதற்கான உரிமை மறுக்கப்பட்டதும், அதன் காரணமாக எல்லோரும் சேர்ந்து

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 21

வெளிநடப்புச் செய்ததும் உண்மை. ஆனால் வெளியிலே போகும்பொழுது, 'சபாநாயகர் ஒழிக', 'முதலமைச்சர் ஒழிக' என்றெல்லாம் 'ஒழிக' கோஷமெல்லாம் அந்தக் காலத்திலே போட்டது கிடையாது. நாகரிகமாக நாம் நடந்துகொண்டோம்; உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஆனால் இன்றைக்கு அந்த நாகரிகம் இல்லை, அது சேருவார் தோஷமாகக்கூட இருக்கலாம். அதைத் தயவுசெய்து நம்முடைய அருமை நண்பர் மணி அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இன்றைக்குக்கூட எடுத்த முடிவு, நேற்றையதினம் நடைபெற்றுவிட்ட ஒரு நிகழ்ச்சி, அவைக் கூட்டத் தொடர் முடிகிற நேரத்தில் தேவையில்லை என்பதை நான் எண்ணிப்பார்த்து, அவை முன்னவரோடு கலந்துபேசி, உரிமைப் பிரச்சினை கொடுத்த ஆற்காடு வீராசாமி அவர்களிடத்திலும் கலந்துபேசித்தான், இப்போது இதைத் திரும்பப் பெற வேண்டுமென்ற வேண்டுகோள் இந்த அவையிலே பேரவைத் தலைவர் அவர்களுக்கு வைக்கப்பட்டது. அதை அவர் ஏற்றுக்கொண்டார்.

கொஞ்சம் ஐந்தாறு நிமிடங்கள் என்னோடு, ஐந்தாறு பேரை வைத்துக்கொண்டு, கட்சியினுடைய தலைவர்களை வைத்துக்கொண்டு, இது சம்பந்தமாக மணி போன்றவர்களும், விவாதிக்கத் தயார் என்றால், நான் தயாராக இருக்கின்றேன். யார் யாருக்கு எத்தனை நிமிடங்கள் கொடுக்கப்பட்டு, அதற்குமேலாக எத்தனை நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்களை எல்லாம் எடுத்து வைத்து நாம் பார்த்தால், நியாயங்கள் நிச்சயமாக நமக்குப் புலப்படும். ஏதோ ஆளுங்கட்சிக்குத்தான் அதிக நேரம், காங்கிரஸ் கட்சிக்குத்தான் அதிக நேரம், தோழமைக் கட்சிகளுக்குத்தான் அதிக நேரம் என்ற அளவிலே இந்த ஆளுங்கட்சி நடந்துகொள்ளவில்லை என்பதையும், எதிர்காலத்திலே அப்படி நடக்காது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்கு உறுதியாக எடுத்துக்கூற விரும்புகின்றேன். ஆனால் ஒவ்வொரு நாளும், ஒன்றரை மணிக்கு முடிய வேண்டிய அவை, இரண்டரை மணி வரையிலே போகிறது; மூன்று, மூன்றரை மணிவரையிலே நடைபெறுகிறது. இதெல்லாம் அவரவர்களுக்கு விரும்புகிற நேரத்திலே, அவர்கள் கையைக்காட்டி, அவர்கள் கொஞ்சம் இன்னொரு ஐந்து நிமிடங்கள் என்று கேட்டு, இப்படி இரண்டு, இரண்டு நிமிடங்களாக உயர்ந்த நேரம் எவ்வளவு என்பதையும் தயவுசெய்து நாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவையின் நேரத்தை நாம்தான் பயனுள்ளதாக ஆக்கவேண்டுமேயல்லாமல், அதை வீணாக ஆக்கிவிடக் கூடாது.

TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூலை 21] [கலைஞர் மு. கருணாநிதி]

அதற்கு எல்லா உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும் தேவை என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். ஒரே subject–லேயே பேசிக்கொண்டிருந்தால், நேரம் வீணாகிறது. எல்லோரும் உட்காருங்கள்.

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஆ) மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடுதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் பின்வரும் அறிக்கையினை அவையில் படித்தளிக்க தங்களின் மேலான அனுமதியினைக் கோருகிறேன்.

கர்நாடகா மற்றும் கேரளாவின் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் கன மழையினால் மேட்டூர் அணைக்குக் கடந்த ஒரு வார காலமாக நீர் வரத்து அதிகரித்துள்ளது. ஜூலை 14 ஆம் தேதி 60 அடியாக இருந்த நீர் மட்டம், நேற்று (20–7–2009) 81 அடியாக உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணைக்குச் சுமாராக வினாடிக்கு 60 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இந்நிலை தொடருமானால், இன்னும் இரண்டு வாரங்களில் அணையின் நீர் மட்டம் 90 அடியைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, காவிரி டெல்டா பகுதியில் சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து 7–8–2009 (வெள்ளிக்கிழமை) முதல் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனைக் கருத்திற்கொண்டு, காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் வேளாண் தொடக்கப் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.